*31*

# இராஜ்யத்தின் விதையை விதைத்தல்

## (13:1–23)

*விதைக்கிறவனைப் பற்றிய இந்த உவமை இயேசுவின் ஊழியத்தின் ஒரு திருப்பு முனையாக தெளிவாக குறிப்பிடப்பட்டது.*

### *உவமை - அதன் பொருளடக்கம் (13:1-9)*

***[1]இயேசு அன்றைய தினமே வீட்டிலிருந்து புறப்பட்டுப் போய், கடலோரத்திலே உட்கார்ந்தார்.***

***[2]திரளான ஜனங்கள் அவரிடத்தில் கூடிவந்தபடியால், அவர் படவில் ஏறி உட்கார்ந்தார்; ஜனங்களெல்லாரும் கரையிலே நின்றார்கள்.***

***[3]அவர் அநேக விசேஷங்களை உவமைகளாக அவர்களுக்குச் சொன்னார்; கேளுங்கள், விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான்.***

***[4]அவன் விதைக்கையில், சில விதைகள் வழியருகே விழுந்தது; பறவைகள் வந்து அதைப் பட்சித்துப் போட்டது.***

***[5]சில விதை அதிக மண்ணில்லாத கற்பாறை இடங்களில் விழுந்தது; மண் ஆழமாயிராததினாலே அது சீக்கிரமாய் முளைத்தது.***

***[6]வெயில் ஏறினபோதோ, தீய்ந்து போய், வேரில்லாமையால் உலர்ந்து போயிற்று.***

***[7]சில விதை முள்ளுள்ள இடங்களில் விழுந்தது; முள் வளர்ந்து அதை நெருக்கிப் போட்டது.***

***[8]சில விதையோ நல்ல நிலத்தில் விழுந்து சிலது நூறாகவும், சிலது அறுபதாகவும், சிலது முப்பதாகவும் பலன் தந்தது.***

***[9]கேட்கிறதற்கு காதுள்ளவன் கேட்கக் கடவன் என்றார்.***

***வசனங்கள் 1, 2.*** இந்த திறப்பு வசனங்கள் இந்த அதிகாரத்தில் பின்வரும் அநேக உவமைகளுக்கு ஒரு அமைப்பாக வழிகோலுகிறது. **இயேசு** கப்பர் நகூமிலிருந்த **வீட்டிலிருந்து,** அவர் "ஜனங்களோடே பேசிக் கொண்டிருந்த வீட்டிலிருந்து" *(12:46),* **கடலோரத்திற்குப்** போனார். கப்பர்நகூம் கலிலேயாக் கடலின் கரையில் சரியாக அமைந்திருந்தது. அங்கே போய் அவர் நின்றதற்குக் காரணம் இன்னும் அதிகமான ஜனங்களிடத்தில் ஒரே நேரத்தில் பேசமுடியுமே என்பதற்காகத்தான். அவர் கடற்கரைக்குப் போனபோது, **திரளான ஜனங்கள் அவரிடத்தில் கூடிவந்தார்கள்.** அந்தப் பகுதியில் அநேக பட்டணங்களிலும் கிராமங்களிலும் இயேசு பிரசங்கித்திருக்கிறார் (லூக்கா *8:1*). இந்த நேரத்தில்,

*"சகல பட்டணங்களிலுமிருந்து திரளான ஜனங்கள் அவரிடத்தில் வந்து கூடினார்கள்" என்று லூக்கா சொல்லுகிறார் (லூக்கா 8:4;* NKJV*).*

*ஜன நெருக்கடி அதிகமாக இருந்தபடியால் இயேசு ஒரு சிறிய* **படவிலே** *ஏறினார். அவர் கரையிலிருந்து கொஞ்சம் உள்ளே தள்ளிப்போன போது, அந்த அமைப்பு ஒரு இயற்கையாய் அமைந்த ஒரு அரங்கம்போல் காட்சியளித்தது, ஜனங்கள் யாவரும்* **கடற்கரையில் நின்று சுலபமாக** *அவர் சொல்லுவதைக் கேட்க வசதியாக இருந்தது. பிரசங்கிக்கப் பட்ட அந்த இடம் பாரம்பரியத்தின்படி "உவமைகளின் சிறு வளைகுடா"*[1] *எனப்பட்டது. அந்த வளைகுடாவின் மையப்பகுதியிலிருந்து யாராவது பேசினால் ஆயிரக்கணக்கானோர் கேட்க முடியும். இயேசு இருந்துகொண்டு பேசின படகே ஒரு பிரசங்க மேடையாக அமைந்திருந்தது. யூத ரபீகளின் வழக்கப்படி அவர் அமர்ந்து போதித்தார் (5:1; 15:29; 24:3; 26:55).*

***வசனம் 3.*** *இயேசு பேசத்துவங்கி* ***அநேக காரியங்களை உவமை யாக அவர்களோடே பேசினார்.*** *இயேசு இந்த பிரசங்க முறையை இதற்கு முன்பு பல நிகழ்ச்சிகளில் பயன்படுத்தியிருக்கிறார், இருந்தபோதி லும் மத்தேயு முதல் முறையாக இப்பொழுதுதான் அடையாளப் படுத்தி "உவமை" எனும் பதத்தில் குறிப்பிடுகிறார். "இராஜ்யத்தின் உவமையில்" இயேசு பிரசங்கித்த முதல் உவமை* **விதைக்கிறவனைப்** *பற்றியது. இது மூன்று சுவிசேஷ சாராம்ஸ கருத்துக்களிலும் காணப்படுகிறது (மத்தேயு 13; மாற்கு 4; லூக்கா 8). உவமைகளைச் சொல்லும்போது, தம்மைக் கவனித்துக் கொண்டிருந்தவர்களுக்கு பரிச்சயமான ஒரு காட்சியையே, குறிப்பாக விவசாய மற்றும் அதைக் கண்காணிக்கிற உருவகத்தையே பயன்படுத்தினார்.*

*"விதைக்கிறவன்" ஒருவன்* ***விதைக்கப் புறப்பட்டான்.*** *அவன் ஒரு நகரத்திலிருந்தோ அல்லது ஒரு கிராமத்திலிருந்தோ அவன் வாழ்ந்து கொண்டிருந்த இடத்திலிருந்து புறப்பட்டு சூழ்ந்திருந்த நிலத்திலே விதையை விதைக்கப் போனான். விவசாயிகள் பெரும்பாலும் அதிகாலையில் புறப்பட்டுப் போய், நாள் முழுவதும் வேலை செய்து, தங்களுடைய வீட்டிலே போய் பாதுகாப்பாக இருக்க பட்டண மதில் சுவர்களுக்குள் போய்ச்சேர மாலையில் திரும்பி வருவார்கள் (நியாயாதிபதிகள் 19:16-21; ரூத் 2:2, 17, 18). கோதுமை வழக்கமாக நவம்பர்/டிசம்பர் மாதங்களில் விதைத்து ஏப்ரல்/மே மாதங்களில் அறுவடை செய்வது வழக்கம்.*

*விவசாயிகள் அவர்களுடைய விதையை நாலாபக்கமும் "தூவி வீசுகிற" முறையில் விதைப்பார்கள். விதைக்கிற போது அவர்கள் கைநிறைய விதைகளை அள்ளி அடுத்த கையின் தோள் பக்கமாய் ஆகாயத்தில் வீசி தூவிக்கொண்டே நிலத்தின் குறுக்கும் நெடுக்குமாக நாலாபக்கமும் செல்வார்கள். அப்படிப்பட்ட முறையில் விதைக்கிற போது, விதைகள் எங்கே விழும் என்று அவர்களால் கண்டுபிடிக்க முடியாது. விவசாயிக்கு போதிய அறுவடையைக் கொடுக்கிற அளவுக்கு நல்ல நிலத்தில் விதை விழுந்திருக்கும் எனத் தெரியும். நல்ல சூழலிலே, அது வளர்ந்து அவனுக்கு நல்லதொரு அறுவடையைக் கொடுக்குமென அவனுக்குத் தெரியும். இந்த உவமையில் விதைக்கிறவனும் விதையும்தான் ஒத்திசையுள்ளவை, நிலம் வித்தியாசப்பட்ட பிரதிபலிப்பைக் கொண்டவை.*

***வசனம் 4.*** *இயேசு முதலாவதாக* ***வழியருகே விழுந்த விதைகளைக்*** *குறிப்பிட்டார். கிரேக்க வார்த்தையான "வழி" (hodos) பொதுவான பொருளில்*

“பாதை” என்ற பதத்தைக் குறிக்கும். அது “நெடுஞ்சாலையைக்,” குறிப்பிடலாம், “வழியைக்,” குறிப்பிடலாம், அல்லது “பாதையைக்” குறிப்பிடலாம். இந்த வசனப்பகுதியில், “நடைபாதையை” வசனம் குறிப்பிடுவதாகத் தோன்றுகிறது (NIV; NRSV). பலஸ்தீனாப் பகுதியில் கற்சுவர் அல்லது முள்வேலி திராட்சைத் தோட்டத்தைச் சுற்றிலும் பாதுகாப்புக்காக அமைக்கப் பட்டிருக்கும் (எண்ணாகமம் 22:24; நீதிமொழிகள் 24:30, 31; ஏசாயா 5:5), தானியம் விளையும் வயலைச் சுற்றிலும் அப்படி அமைக்கப்பட்டிராது (காண்க 12:1) மாறாக, அவைகள் குறுகலான நடைபாதையால் பிரிக்கப் பட்டு, பெரும்பாலும் அடையாளக் கற்களால் எல்லைகள் குறிப்பிடப்படும் (உபாகமம் 19:14; 27:17; யோபு 24:2; நீதிமொழிகள் 22:28; 23:10). இந்த நடைபாதைகள் வருடக்கணக்காக நடந்து நடந்து, வழியருகே இருக்கும் நிலத்தில் அதினால் நன்றாக கடினப்பட்டிருக்கும் ஆதலால் விதைகள் அதின் வழியாக வேர்விடமுடியாது. அதிலே விழும் விதைகள் பூமிக்கு மேலேயே கிடக்கும், **பறவைகளுக்கு** சுலபமான இரையாகி விடும். விவசாயி சென்று அவைகளைப் பொறுக்கியெடுத்து நல்ல நிலத்தில் இடுவதற்குள் அவைகள் பட்சிக்கப் பட்டு விடும்.

**வசனங்கள் 5, 6.** இரண்டாவதாக, சில விதைகள் **கற்பாறையுள்ள இடங்களில் விழுந்தன.** இது பெரும்பாலும் பலஸ்தீன பகுதியில் சகஜமாக நடக்கும். பெரும்பாலான பகுதிகளில், சில அங்குலம் மட்டுமே மண்பிடிப்புடன் கூடிய சுண்ணாம்புச் சரளையைக் கொண்ட கற்பகுதிக் காணப்படும். கிறிஸ்துவின் காலத்தில் சில குறிப்பிட்ட சம பூமிகளைத் தவிர யோர்தான் நதி யருகேயும் கலிலேயாக் கடல் அருகேயும் மட்டுமே நல்லச் செழிப்புள்ள மண் பாங்கான இடங்கள் இருக்கும், மற்ற இடங்களில் பெருமளவில் சாகுபடி செய்யுமளவுக்கு போதிய மண்பகுதி கிடைப்பது அரிது.

சாதாரண இடத்தில் மண் ஆழமாக இல்லாதபடியால், செடிகள் வேகமாக **முளைத்தெழும்பி** மேலே வரும், **சூரிய வெயில்** வெளிப்பட்டவுடன், உஷ்ணத்தினால் அவைகள் **தீய்ந்து போய் விடும்.** அப்படிப்பட்ட செடிகளின் இலைகள் ஆரம்பத்தில் மிக ஆரோக்கியமாகக் காணும்; பலமானதாகவும் தெரியும்; ஆகிலும் சரியான வேர் விடாததினாலும் தண்ணீரோ உரச்சத்தோ செலுத்தப்பட இயலாததினாலும், செடி விரைவில் உதிர்ந்து செத்து விடும். லூக்கா 8:6ல் “அதற்கு சரியான ஈரமில்லாததினால் உலர்ந்து போயிற்று” என்று சொல்லப்படுகிறது.

**வசனம் 7.** மூன்றாவதாக, சில விதைகள் **முள்ளுள்ள இடங்களில்** விழுந்தன. (காண்க யோபு 31:40; எரேமியா 4:3; மத்தேயு 7:16; எபிரெயர் 6:8). இங்கே “முள்ளுக்கு” சொல்லப்படும் கிரேக்க வார்த்தை (*akantha*) “முட்செடிகளைக்” குறிக்கும். இயற்கையில் முள் விதைகளால் முளை வளர்ந்து அந்த வயலில் நிற்கும் முட்செடிகளுக்கிடையே விழுந்த விதைகள் வேர் பிடித்திருந்தது. முட்செடிகள் - அப்பொழுதும் இப்பொழுதும் - அவைகளின் வளர்ச்சி அதி தீவிரமாக இருக்கும். தன் நிலத்தை சுத்தப்படுத்த ஒருவர் மிகப்பெரிய உபத்திரவங்களைச் சந்திக்க வேண்டியிருக்கும்; அப்படிச் சுத்தம் செய்யாமல் போனால், நிலத்தை முட்செடிகள் முழுமையாய் ஆக்கிரமித்துக் கொள்ளும் (நீதிமொழிகள் 24:30-34). ஒரு நிலத்தைச் சுத்தப்படுத்தும்போது முட்கள் வேரோடே பிடுங்கப்பட வேண்டும். அவைகள் வேகமாக மறுபடியும்

முளைத்தெழும்பும். இந்த விஷயத்தில், நல்ல செடிகள் முட்களோடு சேர்ந்து வளரும், இயல்பாக **முட்கள் ... அவைகளை நெருக்கிப் போட்டு விடும்.** தேவையான போஷாக்கு கிடைக்கப் பெறாமல் ஊறிஞ்சப்பட்டு, சூரிய ஒளி, மற்றும் காற்று, நல்ல செடிக்கு கிடைக்காமல் சாகும்.

**வசனம் 8.** நான்காவதாக, இயேசுவின் கதையில் சில விதைகள் **நல்ல நிலத்தில் விழுந்து, சிலது நூறாகவும், சிலது அறுபதாகவும், சிலது முப்பதாகவும் பலன் தந்தது.** கிரேய்க் எஸ். கீனரின் கருத்துப்படி, அந்தப் பகுதியில் அறுவடைகள் சராசரியாக விதைக்கப் பட்டதில் ஏழரையிலிருந்து பத்து மடங்கு வரை விதையின் அளவு கூடுதலாக கிடைக்கும்.[2] இந்தக் கணக்கீட்டின்படி, கிறிஸ்து குறிப்பிடுகிறபடி அசாதரணமானதாக இருக்கும், ஆயினும் அது அற்புதமல்ல.[3] மூதாதைகளின் காலத்தில், ஈசாக்கு தேவனால் ஆசீர்வதிக்கப் பட்டவனாய், 100 மடங்கு அறுவடை செய்தான் (ஆதியாகமம் 26:12). பின்னதாக யூத புத்தகங்களில் இதே மாதிரியான விளைச்சல் குறிப்பிடப்படுகிறது.[4] இங்கே குறிப்பிடப்படுகிற நிறைவான விளைச்சல் வளராத இடங்களில் விழுந்து வீணாகிப்போன விதைகளின் பலன்களையும் ஈடுகட்டுகிறது.

**வசனம் 9. கேட்கிறதற்கு காதுள்ளவன், கேட்கக் கடவன்** எனும் வார்த்தைகளைச் சொல்லி, இயேசு நிறைவு செய்கிறார் (11:15ன் விளக்கவுரையைக் காண்க). உவமைகளைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் அதின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளும்படி அவர் விரும்பினார். இந்த அறிவுரையை வசனம் 43ல் மறுபடியும் குறிப்பிடுகிறார். இந்த உவமைக்கு இயேசு 13:18-23ல் விளக்கமளிக்கிறார்.

## உவமையும் - அதன் நோக்கமும் (13:10-17)

**10அப்பொழுது சீஷர்கள் அவரிடத்தில் வந்து: ஏன் அவர்களோடே உவமைகளாகப் பேசுகிறீர் என்று கேட்டார்கள். 11அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: பரலோக இராஜ்யத்தின் ரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது, அவர்களுக்கோ அருளப்படவில்லை.**

**12உள்ளவன் எவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்; இல்லாதவன் எவனோ அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்.**

**13அவர்கள் கண்டும் காணாதவர்களாயும், கேட்டும் கேளாதவர்களாயும், உணர்ந்து கொள்ளாதவர்களாயும் இருக்கிறபடியினால், நான் உவமைகளாக அவர்களோடே பேசுகிறேன்.**

**14ஏசாயாவின் தீர்க்கதரிசனம் அவர்களிடத்தில் நிறைவேறுகிறது; அதாவது காதாரக் கேட்டும் உணராதிருப்பீர்கள்; கண்ணாரக் கண்டும் அறியாதிருப்பீர்கள்.**

**15இந்த ஜனங்கள் கண்களினால் காணாமலும் காதுகளினால் கேளாமலும், இருதயத்தினால் உணர்ந்து மனந்திரும்பாலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலும் இருக்கும்படியாக, அவர்களுடைய இருதயம் கொழுத்திருக்கிறது; காதால் மந்தமாய்க் கேட்டு, தங்கள் கண்களை மூடிக் கொண்டார்கள் என்பதே.**

***16*உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும் அவைகள் பாக்கியமுள்ளவைகள்.**

***17*அநேக தீர்க்கதரிசிகளும் நீதிமான்களும் நீங்கள் காண்கிறவைகளைக் காணவும், நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும் விரும்பியும், காணாமலும் கேளாமலும் போனார்களென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.**

***வசனம் 10.*** *பின்னர்* ***சீஷர்கள்*** *இயேசுவிடம் போய்,* ***ஏன் அவர்களோடே உவமைகளாகப் பேசுகிறீர்?*** *என்று கேட்டார்கள். இயேசு வீட்டிலிருக்கும்போது அநேகமாக இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கலாம் (13:36). மாற்கு 4:10, அவரைப் பின்பற்றுவோர், "அவர் தனித்திருக்கிறபோது" இந்த உவமையைக் குறித்து அவரிடத்தில் கேட்டார்கள் என்று சொல்கிறது.*

*இயேசு இதற்கு முன்பாகவும் உவமையில் பேசியிருக்கிறார், ஆகிலும் இங்கே அவர் பேசுகிற அளவுக்கு பேசியதில்லை. அவருடைய போதனை முறையில் இருந்த வித்தியாசத்தை சீஷர்கள் புரிந்து கொண்டார்கள், அதினால் அவர்கள் குழப்பமடைந்தார்கள். இயேசுவின் உவமைகள் எப்பொழுதும் புரிந்து கொள்வது எளிதல்ல என்பது சீஷர்கள் கேட்ட கேள்வியிலிருந்து தெளிவாகிறது.*

***வசனம் 11.*** *கர்த்தர் அதற்குப் பிரதியுத்தரமாக,* ***பரலோக ராஜ்யத்தின் ரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது.*** *"ரகசியம்," "ராஜ்யம்," எனும் பதங்கள் தானியேல் 2ல் ஒன்றாகக் குறிப்பிடப்படுகிறது, அது தேவனுடைய நித்திய ராஜ்யத்தின் வருகையை முன்னறிவித்த தீர்க்கதரிசியின் வார்த்தைகள் (தானியேல் 2:18, 19, 22, 23, 27, 30, 44, 47). "இரகசியம்" என்பது கிரேக்க மொழியில் (mustērion) ஒரு காலத்தில் மறைபொருளாக இருந்தது இப்பொழுது வெளிப்படுத்தப் பட்டுள்ளது என்ற பொருளில் குறிப்பிடப் படுகிறது. இன்னும் குறிப்பாகச் சொன்னால், மனுகுலத்தை இரட்சிக்க திரைக்குப் பின்னால் தேவனுடைய திட்டம் இருப்பதையும் (யூதர் புறஜாதி ஆகிய இருசாராரும்) கிறிஸ்துவின் பலி மற்றும் தமது சபையை ஸ்தாபிப்பதன் மூலம் இரட்சிக்கப் படுவார்கள் என்பதையும் அது குறிப்பிடுகிறது (ரோமர் 16:25, 26; எபேசியர் 3:4-12; கொலோசெயர் 1:25-27).*

*இராஜ்யத்தின் இரகசியம் வெளிப்படுத்தப்படுதல் என்பது தேவனுடைய கிருபையின் விளைவு. ஆயினும், இயேசுவுக்கு செவிகொடுக்க மறுப்பவர்கள் தங்களுடைய புரிந்து கொள்ளும் வாய்ப்பை இழக்கின்றனர். இயேசு இராஜ்யத்தை ஸ்தாபிக்க வந்த மேசியா என்று சீஷர்கள் விசுவாசித்தபடியால், அவரது உவமைகளைப் பற்றிக்கொள்ள அவர்கள் கவனமாயிருந்தனர்.*

***வசனம் 12.*** *தமது சீஷர்களை உற்சாகப்படுத்தும் வகையில், இயேசு,* **உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்; இல்லாதவனிடத்திலிருந்து உள்ளதும் எடுத்துக் கொள்ளப்படும்** *என்றார் (காண்க 25:29; மாற்கு 4:25; லூக்கா 8:18; 19:26). கர்த்தருடைய உவமைகளின் செய்தியை புரிந்து கொண்டவர்கள் இன்னும் அதிக ஆழமான ஆவிக்குரிய சத்திய அறிவையும் கூடப் பெற்றுக் கொள்வார்கள். ஆவிக்குரிய பகுத்தாய்வு இல்லாதவர்கள் அவருடைய உவமைகளின் பொருளை புரிந்து கொள்ளார்கள். அவர்கள் புரிந்து கொள்ளும் ஆற்றல் மிக்கவர்கள்தான், ஆகிலும் அப்படிச் செய்ய தெரிந்து கொள்வதில்லை. அதனால், அவர்களிடத்தில் இருக்கிற*

ஆவிக்குரிய அறிவையும் எடுத்துக் கொள்வார் என்று இயேசு சொன்னார்.

***வசனங்கள் 13-15.*** ஏற்றுக்கொள்ள மனதில்லாதவர்களுக்கு ஒரு திரைமறைவாக இயேசு **உவமைகளில்** பேசினார். அவர்களுடைய இருதயக் கடினம் அவருடைய செய்தியை புரிந்து கொள்ள இயலாதபடி செய்தது. அவர்களின் இந்த மனதில்லா தன்மையை ஏசாயா முன்னுரைத்த **தீர்க்கதரிசன நிறைவேற்றமாக** இயேசு கண்டார். ஏசாயா 6:9, 10ன் இந்த மேற்கோள் செப்துவஜிந்த்தில் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தைகளிலிருந்து எடுத்துக் கூறினார் (காண்க யோவான் 12:39-41; நடபடிகள் 28:25-27).

அவர்கள் **கேட்கக்கூடியவர்களாயிருந்தாலும்,** அவர்கள் **புரிந்து கொள்ளவில்லை, அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தாலும்,** அறிந்து **உணர்ந்து கொள்ளவில்லை.** நேரடியாக பேசப்பட்ட தோற்ற வார்த்தைகள் (ஏசாயா தீர்க்கதரிசன ஊழியத்துக்கு அழைக்கப்பட்ட வசனப் பகுதியின் நேரடி வார்த்தைகள்) ஏசாயாவின் நாட்களில் வாழ்ந்த மக்களுக்குச் சொல்லப்பட்டவை. அதுவே இயேசு போதித்த மக்களுக்கும் நேரடியாக குறிப்பிடப்படக் கூடியவைகளாக இருந்தன. பிரச்சனை இதுதான், அவர்கள் திருப்பித் திருப்பி தேவனுடைய வார்த்தையைக் கேட்டார்கள், ஆனாலும் அப்படிக் கேட்டு களைத்துப் போனார்கள், எனவே அறிந்துகொள்ள தங்கள் மனதை அவர்கள் தங்கள் **தங்கள் காதுகளை** அடைத்துக் கொண்டார்கள், அதன் பொருளைக் காணக்கூடாதபடிக்குத் **தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள்.** அவர்களின் முரட்டாட்டமே தேவனுடைய மன்னிப்பை அவர்களாக தவிர்க்கச் செய்தது.

***வசனம் 16.*** அவ்வளவு ஜனக்கூட்டத்தினருக்கு எதிரிடையாக சீஷர்கள் ஆவிக்குரிய சத்தியத்தை கேட்க மனதைத் திறந்தனர். இதன் விளைவாக இயேசு அவர்கள்மேல் ஆசீர்வாதங்களை அறிவிக்கிறார்: **உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும் அவைகள் பாக்கியமுள்ளவைகள்.** அவர்களுடைய இருதயம் ஏற்றுக் கொள்ளும் தன்மையுடையவைகளாயிருந்தமையால் அவர்கள் இயேசு முன்வைத்த சத்தியங்களை கேட்கவும் காணவும் செய்தார்கள். ஆயினும் சில வேளைகளில் அவர்கள் அறிந்து கொள்ளுவதில் மந்தமாயிருந்தார்கள் (15:15, 16).

***வசனம் 17.*** பழைய ஏற்பாட்டுத் **தீர்க்கதரிசிகள்** எண்ணற்ற இன்றியமையாத எதிர்கால நிகழ்வுகளை முன்னுரைத்தனர், ஆனால் ஆகிலும் தீர்க்கதரிசனம் சொன்ன அனைவரும் அவைகளைப் புரிந்து கொண்டார்களா என்பது சந்தேகமே. உதாரணமாக, தானியேல் தனக்குக் காட்டப்பட்ட தரிசனத்தைக் குறித்து கலக்கமடைந்தார் (தானியேல் 9:1-27), எனவே அவர் தேவனிடத்தில் ஜெபித்தார். அதற்குப் பதிலளிக்கும்படி, காபிரியேல் அனுப்பப்பட்டு (அவருக்கு) அறிவை உணர்த்தும்படி சொல்லப்பட்டார் (தானியேல் 9:22). தீர்க்கதரிசிகள் சீஷர்களின் அனுபவத்தை **காணவும் கேட்கவும்** பெரிதும் ஆசையாயிருந்தனர். பேதுரு பின்வருமாறு எழுதினார்:

> "உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்து தீர்க்கதரிசனஞ் சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனை பண்ணினார்கள்; தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்ன காலத்தைக்

*குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள். தங்கள் நிமித்தமல்ல, நமது நிமித்தமே இவைகளை தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது; பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக் கொண்டு இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது; இவைகளை உற்றுப்பார்க்கத் தேவ தூதரும் ஆசையாயிருக்கிறார்கள்" (1 பேதுரு 1:10-12).*

*இயேசுவின் உவமைகள் மூலமும் போதனைகள் மூலமாகவும், தீர்க்க தரிசிகளுக்கு வெளிப்படுத்தப்படாத சத்தியங்களை அப்போஸ்தலர்கள் கற்றுக் கொண்டிருந்தார்கள். இதன் விளைவாக, "தேவனுடைய அநந்த ஞானமானது" சபை ஸ்தாபிக்கப்பட்டதன் மூலமாக தூதர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டது (எபேசியர் 3:8-12). (**நீதியுள்ள மனிதர்களுடன்** தீர்க்கதரிசிகள் இணைக்கப்படுவதற்கு 10:41ன் விளக்கவுரையைக் காணவும்.)*

## *உவமையும் - அதன் விளக்கமும் (13:18-23)*

***18ஆகையால் விதைக்கிறவனைப் பற்றிய உவமையைக் கேளுங்கள்.***

***19ஒருவன், ராஜ்யத்தின் வசனத்தைக் கேட்டும் உணராதிருக்கும்போது, பொல்லாங்கன் வந்து, அவன் இருதயத்தில் விதைக்கப்பட்டதைப் பறித்துக் கொள்ளுகிறான்; அவனே வழியருகே விதைக்கப்பட்டவன்.***

***20கற்பாறை இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்டு, உடனே அதைச் சந்தோஷத்தோடே ஏற்றுக் கொள்ளுகிறவன்;***

***21ஆகிலும் தனக்குள்ளே வேரில்லாதவனாய், கொஞ்சக்கால மாத்திரம் நிலைத்திருப்பான்; வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைவான்.***

***22முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்கிறவனாயிருந்தும், உலகக்கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால், அவனும் பலனற்றுப் போவான்.***

***23நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவனோ, வசனத்தைக் கேட்கிறவனும் உணருகிறவனுமாயிருந்து, நூறாகவும் அறுபதாவும் முப்பதாகவும் பலன் தருவான் என்றார்.***

***வசனம் 18.*** *தனித்திருக்கையில், இயேசு* ***விதைக்கிறவனைப் பற்றிய உவமையைக்*** *குறித்து சீஷர்களுக்கு விளக்கமளித்தார் (13:10 க்கான விளக்கவுரையைக் காண்க). அவர் வலியுறுத்தி தம்மைக் கவனிக்கச் செய்தார்; எளிதாக "கேளுங்கள்" என்று சொல்லாமல் கிரேக்க வசனப்பகுதி நேரடிப்பொருளில், "நீங்கள் கேளுங்கள்" என்று சொல்லுகிறது. திறந்த மனதுடன், உள்ளவர்களாய் அவர்கள் புரிந்து கொள்ளக்கூடியதாயிருந்தது.*

*இந்த உவமையில் சொல்லப்படும் விதைக்கிறவன் யார்? முதல் பதில் "இயேசு." களைகளைப் பற்றிய உவமை இந்த அதிகாரத்தின் பின் பகுதியில் காணப்படுகிறது, இயேசு, "நல்ல விதையை விதைக்கிறவன்" "மனுஷகுமாரன்," என்று சொன்னார் (13:37). அவர்தான் இராஜ்யத்தின் ஆரம்ப கால விதையை*

*தூவியவர். ஆயினும், அவர் ஒரு வரையறைக்குட்பட்ட கட்டளையைக் கொடுத்து தமது சீஷர்களைக் அனுப்பியவர், பிறகு பிரதான கட்டளையாக "உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கிக்கச் சொன்னார்" (மாற்கு 16:15). எனவே, விதைக்கிறவன் எனும் பதம், செய்தியை பிரசங்கிக்கிற எந்த சீஷனையும் குறிக்கும்.*

*இந்த உவமையில் விதை எப்படி கணிக்கப்பட வேண்டும்? மத்தேயு "சுவிசேஷம் [இராஜ்யத்தின்] (13:9-23), வசனத்தைக் குறிக்கிறதாயிருக்கிறபடியால்" லூக்கா சுவிசேஷம் சொல்லுகிறது "விதை தேவனுடைய வசனம்" (லூக்கா 8:11).*

*நிலங்கள் உவமைக்கு திறவுகோல் அமைப்பு. அவை (வசனத்தைக்) கேட்கிற வித்தியாசப்பட்ட நபர்களை அல்லது இருதயங்களை அடையாளப்படுத்துகிறது. அது "விதைக்கிறவனைப் பற்றிய உவமையேயானாலும்," கதையின் வலியுறுத்தல் விதைகளைப் பெற்றுக் கொள்ளும் நிலங்கள் (இருதயங்கள்) தான். விதைக்கப்பட்டவிதை வித்தியாசப்பட்ட ஏற்பைப் பெறுகிறது, விளைவும் வித்தியாசப்பட்ட பதில்களாகவே இருக்கும்.*

***வசனம் 19.*** *முதலாவதாக,* ***வழியருகே விழுந்தவிதை*** *(காண்க 13:4). அந்த விதை வேர் பிடிக்கக் கூடாத அளவுக்கு கடினமானதும் ஆயத்தப்படுத்தப் படாததுமாகிய நிலத்தில் விழுந்தது. பூமியின் மேல் அந்த விதை பறவைகளின் கண்ணில் துல்லியமாய் தெரிகிறதால் உணவுக்காக பொருக்கியெடுக்கப்பட்டு, விரைவில் பட்சித்துப் போடத்தக்கதாக கிடக்கும். பிரச்சனை அந்த விதையில் இல்லை, ஏனெனில் அது நல்ல விதை, ஆனால் அது விழுந்த நிலம்தான் பிரச்சனை. நிலமானது ஒருவன்* ***இராஜ்யத்தின் வசனத்தைக் கேட்டு அதை அறிந்து கொள்ளாதவனைக் குறிக்கும்,*** *இந்த மனிதர்கள் புரிந்து கொள்வதில்லை ஏனெனில், பறவைகளைப் போல (13:4). பொல்லாங்கன் வந்து அதுவேர் விடுவதற்கு முன்பே, அவைகளை பட்சித்துப் போட்டு விடுகிறான்.*

*பொல்லாங்கன் என்பது எவ்வித குளறுபடியுமின்றி சாத்தானைக் குறிக்கிறது. அவன் கொடிய குணமுள்ள பறவைகளுடன் தொடர்புடையவன் என வேதாகமத்திற்கு அப்பாற்பட்ட யூத புத்தகங்களில் எழுதப்பட்டுள்ளன. அவைகளில் ஒரு சம்பவமாக தொடர்ந்து, அவன் பறவைகளை அனுப்பி, "பூமியில் விதைக்கப்படும் விதைகளை அவைகள் உண்ணும்படி செய்து" மனித வர்க்கத்தின் அறுவடை பெற இயலாமல் வெள்ளாமைகளை கொள்கையிடுகின்றான். "விதைகள் உழப்பட்ட மண்ணுக்குள் போவதற்குள்ளாகவே, காகங்கள் பூமிக்கு மேல் கிடக்கும் அந்த விதைகளை பொறுக்கிவிடும்."[5]*

*மனிதனுடைய இருதயங்களிலிருந்து தேவனுடைய வசனத்தை அப்புறப்படுத்த சாத்தானுக்கு அநேக வழிகள் உண்டு. வேறொரு உருவகத்தைப் பயன்படுத்தி, பவுல் சொன்னார், "தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்" (2 கொரிந்தியர் 4:4). தேவனுடைய ஜனங்கள் சாத்தானுடைய தந்திரங்களை அறியாதவர்களாயிருக்கக் கூடாது (2 கொரிந்தியர் 2:11; எபேசியர் 4:27; 2 தீமோத்தேயு 2:26; 1 பேதுரு 5:8; 1 யோவான் 2:14-17).*

***வசனங்கள் 20, 21.*** *இரண்டாவதாக,* ***கற்பாறைகளில் விழுந்த விதைகளைப்பற்றி*** *இயேசு விளக்கமளித்தார் (காண்க 13:5).* ***சந்தோஷமாய் செய்தியை உடனடியாக ஏற்றுக் கொள்கிற*** *ஒரு மனிதனை இந்த நிலம் சித்தரிக்கிறது. இருப்பினும், விதையானது விரைவில் செத்துவிடுகிறது, ஏனெனில்* ***பாடுகளோ, உபத்திரவங்களோ ஏற்படும் போது,*** *இவ்வகையான மனிதன் விழுந்து போகிறான்.* ***விழுந்து போகிறான்*** *என்பதற்குப் பதிலாக திருத்தப்பட்ட ஆங்கில வேதாகமத்தில், "நிலைத்து நிற்கத் திராணியில்லாமற் போகிறான்" என்றுள்ளது. லூக்கா 8:13ல் "கொஞ்சக் காலம் மாத்திரம் விசுவாசிக்கிறான்" என்றுள்ளது. கேட்கிற இப்படிப்பட்டவனின் முக்கிய பிரச்சனை என்னவெனில், மனதில் உறுதியின்மையே. ஆழம் அல்லது உறுதியான* ***வேர் இன்றி***, *அவன் விரைவில் விசுவாசத்திலிருந்து விலகிப் போகிறான். உபத்திரவம் அல்லது பாடுகளுக்கு முதல் அடையாளமாக, தீய்ந்து போகும் வெயிலால் பிரதிநிதித்துவப்படுத்தபடி (13:6) அவன் உதிர்த்து போகிறான். "இது படிப்படியாக இழக்கும் ஆர்வமல்ல, நெருக்கடியால் திடீரென விழுந்து போகுதல்" என்று* R. T. *பிரான்ஸ் சொன்னார்.*[6]

***வசனம் 22.*** *மூன்றாவதாக,* ***சில விதைகள் முள்ளுள்ள இடங்களில் விழுந்தன*** *(காண்க 13:7). இந்த நிலம் தேவனுடைய வசனத்தைக் கேட்கிறவர்களை,* ***உலகக் கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும்*** *வந்து அதை நெருக்கிப் போட அனுமதிப்பவர்களைக் குறிப்பிடுகிறது. இதன் விளைவாக, அவர்களின் ஆவிக்குரிய வாழ்க்கை கனியற்றதாக இருக்கிறது. லூக்காவில், அப்படிப்பட்டவர்கள் வளர்ச்சிக்குரிய "பலன் கொடாதிருக்கிறார்கள்" என்று இயேசு சொன்னார் (லூக்கா 8:14). "உலகக்கவலையும்" "ஐசுவரியத்தின் மயக்கமும்" பற்றி மலைப்பிரசங்கத்தில் இயேசு ஒன்றாகக் குறிப்பிட்டார் (6:19-34). கிறிஸ்துவைப் பின்பற்றிச் செல்லுவோர் நித்தியத்திற்கான பாதையில் செல்லும் போது, அநித்தியமான காரியங்கள் தங்களை திசைமாறிப்போக அனுமதித்து விடக் கூடாது. வாழ்க்கையில் உபத்திரவங்கள் வரும்போது அதிலே அப்படியே மூழ்கிப் போவது மிகச் சுலபமானது அதேபோல் ஐசுவரியத்தின் மயக்கத்தில் திளைத்திருப்பதும் சுலபமானது. ஐசுவரியம் வஞ்சனையுள்ளது ஏனெனில் அது அளவுக்கு மிஞ்சிய வாக்குறுதியைக் கொடுத்து ஜனங்கள் தேவனை மறக்கச் செய்கிறது, இதுவே அனைத்து ஐசுவரியத்தின் மூலக்கூறு (உபாகமம் 8:11-20; நீதிமொழிகள் 30:7-9; பிரசங்கி 2:4-11; லூக்கா 12:13-34; 1 தீமோத்தேயு 6:17-19; எபிரெயர் 13:5, 6).*

***வசனம் 23.*** *நான்காவதாக,* ***நல்ல நிலத்தில் விழுந்தவிதை*** *(காண்க 13:8),* ***வசனத்தைக் கேட்டு அதைப் புரிந்து கொள்ளும் மனிதனை*** *முற்படுத்திக் காட்டுகிறது. இயேசு இந்த நபர்களை விவரித்து, அவர்களின் இருதயம் "உண்மையும் நன்மையுமானது" என்று குறிப்பிட்டார் (லூக்கா 8:15). இப்படிக் கேட்பவர்கள் "வசனத்தைக்" கேட்கிறவர்களாயிராமல் அதை உணர்ந்து, அவைகள் தங்களுடைய இருதயங்களில் வேர்விட்டு வளரவும் செய்கின்றனர். அவர்கள் ஆவிக்குரிய ஆழமும் உறுதிமிக்கதுமான இருதயம் படைத்தவர்கள், வாழ்வில் வரும் உபத்திரவங்களில் அசையாமல் அவர்கள் நிலைத்திருப்பவர்கள். அவர்கள் ஐசுவரியத்தின் கவர்ச்சிக்கு எதிர்த்து நிற்கிறார்கள் ஏனெனில்*

*அவர்களுக்கு உண்மையான ஐசுவரியத்தின் மதிப்பு தெரியும் (காண்க எபிரெயர் 11:24-26).*

*இப்படி (வசனத்தைக்) கேட்பவர்கள் விசுவாசத்தில் நிலைத்திருந்து கனி கொடுப்பவர்களாயுமிருக்கிறார்கள். இயேசு தேவையான ஆவிக்குரிய பொறுமையை அழுத்தமாகப் பேசினார்: இவர்கள் "அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள்" (லூக்கா 8:15). வித்தியாசப்பட்ட கனிகொடுத்தல்,* **நூறாகவும், அறுபதாகவும் முப்பதாகவும்** *பலன்தரும் என்பது, விசுவாசிகளின் பலன் கொடுக்கும் ஊழியத்தை பிரதிபலிக்கிறது. "ஒருவன் என்னில் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான், என்னையல்லாமல் உங்களால் ஒன்றுஞ்செய்யக் கூடாது" என்று இயேசு சொன்னார் (யோவான் 15:5). கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்கு மணமுடிக்கப்பட்டவர்கள் அதினால் அவர்கள் "தேவனுக்கு கனிகொடுக்கக் கூடியவர்கள்" என்று பவுல் ஒப்புவமையாகக் குறிப்பிட்டார் (ரோமர் 7:4). திருமணத்தினால் உண்டாகும் கனி பிள்ளைகள். கிறிஸ்துவுக்கு மணமுடிக்கப்பட்டவர்கள் தேவனுக்கென்று பிள்ளைகளை கனியாகக் கொடுக்க வேண்டும். கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்வில் வேறு பல கனிகளையும் கொடுக்க வேண்டியவர்கள் (கலாத்தியர் 5:22, 23ஐக் காண்க). ஒருவர் கனியற்றிருந்தால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு, உலர்ந்து போவான். அப்படிப்பட்டவைகளைப் சேர்த்து, அக்கினியிலே போடுவார்கள் (யோவான் 15:6).*

*கிறிஸ்தவர்கள் வசனங்களை விதைக்கிறவர்களாயும் அதன் பலனுக்காக ஜெபிக்க வேண்டியவர்களாயும் இருக்கிறார்கள். விதையை நாம் விதைக்க வேண்டும், தேவன் தமது பகுதியைச் செய்ய பொறுமையாய் காத்திருக்க வேண்டும்.*

✧✧✧✧✧ ***பாடங்கள்*** ✧✧✧✧✧

## *இராஜ்யத்தின் விதையை விதைப்பது (13:1-9, 18-23)*

*விதைக்கிறவனைப் பற்றிய உவமையில் இயேசு அவரைப் பின்பற்றுவோர் உலகத்தில் சத்தியத்தைக் கொண்டு செல்ல வழியைக் கொடுத்திருக்கிறார். விதையை மொத்தமாக வைத்திருப்பது நல்லது தான், ஆனாலும் அதை "அள்ளித்தூவும்" ஊழியத்தைப் போல் பலன் தராது. நாம் பெருக விதைக்கிறவர்களாய் இருந்தால், விதைகள் நல்ல நிலத்தில் போதிய அளவுக்கு விழும், அல்லது நல்ல நேர்மையான இருதயங்களுக்குள் போய்ச் சேரும், கர்த்தருக்கு பெருக்கமான அறுவடையை உறுதியளித்திருக்கும். விதைப்பதையும் தண்ணீர் பாய்ச்சுவதையும் நாம் செய்தால், விளைச்சலுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல. பவுல் அளித்த விளக்கம், "நான் கண்டேன், அப்போல்லோ நீர் பாய்ச்சினான், ஆனால் தேவனே விளையச் செய்கிறார்" (1 கொரிந்தியர் 3:6). தேவனும் வாக்களித்து, "என் வசனமும் ... வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்," என்றார்*

*(ஏசாயா 55:11).*

*விதைத்தலும் அறுத்தலுமாகிய பிரமாணத்தின் (விதியின்) படி ஒவ்வொரு வகையான விதையும் அதின் இனத்துக் கேற்ற வித்துக்களைப் பிறப்பிக்க வேண்டும் (ஆதியாகமம் 1:11, 12). நாம் ஒரு குறிப்பிட்ட வகை விதையை விதைக்கிற போது, அதே வகை உற்பத்தியை அதிலிருந்து நாம் பெறுகிறோம். மாமிசக் காரியங்களில் எது உண்மையோ அது ஆவிக்குரிய விஷயத்திலும் உண்மை (காண்க கலாத்தியர் 6:7-9). ஆவிக்குரிய விதை விதைக்கிறபோது ஆவிக்குரிய விளைவையே திரும்பப் பெறுவோம். தேவனுடைய கலப்படமில்லாத வசனம் விதைக்கப்படும் போது, அது கிறிஸ்தவர்களை, கிறிஸ்தவர்களை மட்டுமே உற்பத்தி செய்யும்.*

*இது குறித்து, இயேசுவும், "போங்கள், போதியுங்கள், ஞானஸ்நானப்படுத்துங்கள், இன்னும் கொஞ்சம் போதியுங்கள்" என்றார் (மத்தேயு 28:18-20). மற்றவர்களின் ஆழமான ஆவிக்குரிய தன்மைக்கு நாம் பொறுப்பாளிகளல்ல, ஆனால் விதையை விதைக்கிற பொறுப்பு நமக்கு இருக்கிறது. இயேசு அதைச் செய்தார் (7:29; மாற்கு 1:27), மற்றும் பவுல் கட்டளையிட்டார் (1 தீமோத்தேயு 4:16; 2 தீமோத்யே 3:16).*

## *வித்தியாசப்பட்ட வகை நிலங்கள் (13:1-9, 18-23)*

*இயேசுவின் உவமையில் போலவே, சுவிசேஷ வித்து இன்று வித்தியாசப்பட்ட நிலங்களில் விழுகிறது. நிலம் பலதரப்பட்ட மக்களையும் தேவனுடைய வசனத்தை அவர்கள் ஏற்றுக் கொள்ளும் விதத்தையும் முன்வைக்கிறது.*

*கடினமான நிலம் (வழி).* சுவிசேஷ வித்து சில ஜனங்களுடைய கடினமான இருதயத்தில் ஊடுறுவிச்செல்ல முடியாது. அவர்கள் தேவனுடைய பரிசுத்தத்தையோ தங்களுடைய பாவநிலவரத்தையோ, அதன் விளைவுகளையோ, கிறிஸ்துவின் பலியாக்கப்பட்ட நிவாரணத்தின் அவசியத்தையோ, வருகின்ற நியாயத்தீர்ப்பின் நிச்சயத்தையோ புரிந்து கொள்வதில்லை, ஆதலால் சுவிசேஷம் அவர்களுக்கு எந்த நற்பலனையும் கொடுப்பதில்லை.

*கற்பாறையான நிலம்.* வேறு சில ஜனங்கள் சுவிசேஷவித்துக்களை மிகுந்த சந்தோஷத்தோடு உடனடியாக ஏற்றுக் கொள்கின்றனர்; ஆகிலும் எதிர்ப்புகள் வரும்போது, விரைவில் அவர்கள் உலர்ந்து, ஆவிக்குரிய ரீதியில் மரித்தும் போவார்கள். கிறிஸ்துவிடமிருந்து பின் வாங்கி உலகத்துக்கே திரும்பி விடுகிறார்கள்.

*முள்ளுள்ள நிலம்.* சுவிசேஷச் செய்தியை ஏற்றுக்கொள்பவர்கள் ஆவிக்குரிய உற்பத்தி வாழ்க்கையின் "முட்களால்" நெருக்கப்பட்டு பலனற்றுப் போவார்கள். இன்று அநேக கிறிஸ்தவர்கள் இந்த பிரிவைச் சார்ந்துள்ளார்கள். அவர்கள் தங்கள் சொந்த அலுவல்கள் விருப்பங்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்தி ஆவிக்குரிய அபிவிருத்திக்கு போதிய நேரம் இல்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் நடப்பிக்க வேண்டிய ஜெபங்கள், வேத வாசிப்பு, சபை ஆராதனையில் பங்கேற்பு, வீட்டுச்சந்திப்பு, தனிநபர் ஊழியம், மற்றவர்களுக்குச்

*செய்யும் ஊழியம் ஆகியவை பிழியப்படுகின்றன, இதன் விளைவாக அவர்கள் எஜமானருக்கு கொஞ்சம் கனி கொடுப்பவர்களாகின்றனர்.*

*நல்ல நிலம். தேவனுடைய காரியங்களில் இளகிய மனமுடையவர்கள் சந்தோஷமாய் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்கின்றனர். ஆவிக்குரிய ஒழுக்கக் காரியங்களில் விசுவாசத்தோட ஈடுபாடு காட்டுகின்றனர், ஒரு பலமான கிறிஸ்தவ வேரை ஸ்தாபிக்கின்றனர், அது அவர்களை முறையாக வளரச் செய்கிறது. அதன் விளைவாக, கர்த்தருக்கென்று மிகுந்த கனிகளைக் கொடுக்கின்றனர்.*

*முடிவுரை. ஒவ்வொரு தனிநபரும் தன்னைத்தானே கேட்க வேண்டிய கேள்வி, "நான் எப்படிப்பட்ட நிலமாயிருக்கிறேன்"; "என்னென்ன வழிகளில் இன்னும் அதிகபலனை இராஜ்யத்துக்கென்று கொடுக்க நான் மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும்?"*

டேவிட் ஸ்டீவர்ட்

---

குறிப்புகள்

[1]Michael J. Wilkins, "Matthew," in *Zondervan Illustrated Bible Backgrounds Commentary*, vol. 1, *Matthew, Mark, Luke*, ed. Clinton E. Arnold (Grand Rapids, Mich.: Zondervan, 2002), 82. [2]Craig S. Keener, *A Commentary on the Gospel of Matthew* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1999), 377. [3]Josephus *கப்பர்நகூமைச் சுற்றிலுமிருந்த நிலங்களை புகழ்ந்தார், அதன் மண்வளம் அப்படியிருந்தது.* (Josephus *Wars* 3.10.8.) [4]*Sibylline Oracles* 3.263-64; *Jubilees* 24.15. [5]*Jubilees* 11.10, 11; *காண்க* Talmud *Sanhedrin* 107a. [6]R. T. France, *The Gospel According to Matthew*, The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 219.